அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 26/2001

எனது இல:11/309ஈ95/22
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள்,உள்ளூராட்சி,
தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு.07
2001.10.19

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்

**அரச சேவையின் கனிஸ்ட தரங்களிலுள்ள தற்காலிக, அமய பதிலீட்டு ஊழியர்களை நிரந்தரப்படுத்தல்**

2001 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதிக்கு 180 நாட்கள் தொடர்ச்சியாக சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ளவர்களும் வேலை, நடத்தை திருப்திகரமாக உள்ளவர்களுமான தொழிலாளர் தரங்கள், அலுவலக பணியாளர் சேவை, மற்றும் சாரதியாளர் சேவையின் தற்காலிக, அமய, பதிலீட்டு ஊழியர்கள் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்வார்களாயின் 2001 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து குறித்த சேவைகளின் ஆட்சேர்ப்புத் தரங்களில் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று அரசு தீர்மானித்துள்ளது.

1. 2001 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியில் வெற்றிடம் இருக்க வேண்டும்
11. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்கிய நிரந்தர பதவியொன்றில் தொடர்ந்து சேவையாற்றி இருக்க வேண்டும்,
111. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

02, இதன் கீழ் நிரந்தரப்படுத்துவதற்கு தகைமைகளை கொண்டுள்ள ஊழியர்கள் 2001.10.01 ஆந் திகதி 45 வயதை கடந்திருந்தாலும் அவர்கள் பதிலீட்டு ,அமய ,தற்காலிக முறையில் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் 45 வயதை கடந்து செல்லாதிருப்பின் இம் முறையின் கீழ் அவர்களை நிரந்தரப்படுத்தலாம்.

03. மேற்குறிப்பிட்டுள்ள அரசின் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுப்பதற்கு தாமதிக்காது உரிய ஒழுங்குகளை செய்யவும்.

04. பொதுத்திறைசேரியின் இணக்கத்துடன் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்: எம்.என்.ஜுனைட
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள்,உள்ளூராட்சி,
தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு